Registered as a News Paper

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 22 (05-02-1992) புதன்கிழமை ஓசை: 352

## க. பொ. த. உயர்தரம் 1992

### பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

க. பொ. த (உ/த) ஆகஸ்ட் 1992 பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பமுடிவு திகதி 1992 மார்ச்மாதம் 3ஆம் திகதி ஆகும். பரீட்சைக் கட்டணம் - ஒருபாடம் ரூபா 40, இரண்டு பாடங்கள் ரூபா 80, மூன்றுபாடங்கள் ரூபா 120, நான்கு பாடங்கள் ரூபா 150 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இத்தகவலைப் பரீட்சை ஆணையாளர் (6ஆம் பக்கம் பார்க்க)

# மாபெரும் வெகுசன போராட்டம்

# பேரணிகள்; ஆர்ப்பாட்டங்கள்

## இன்று ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாடு தழுவிய மாபெரும் வெகுஜனப் போராட்டம் இன்று நடைபெறவுள்ளது. பல்வேறு பொதுசன அமைப்புக்கள் இணைந்து குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் சகல நெருக்கடிகளையும் நீக்கக்கோரி நடைபெறும் இப்போராட்டத்தின் முதற் கட்டமாக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும், மறியல் போராட்டமும் நடாத்தப்படவுள்ளன.

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கை மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புக்கள், பொருளாதாரத் தடைகளை நிறுத்தக் கோரியும், மாணவர் கல்விபாதிப்பு, பாடசாலைகள் மீது விமானக் குண்டுவீச்சு, தமிழ் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிவாரண உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தாமை ஆகியவற்றை ஆட்சேபித்தும் இடம்பெயர்ந்த மற்றும் தொழில் பாதிக்கப்பட்ட மக்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை முன்வைத்தும், தமிழ் மக்கள்மீது சிறிலங்கா அரசினால் தொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு அழுத்தங்களைத் நீக்கக் கோரியும் இவ்வெகுஜனப் (6ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்களின்றி நயினை மக்கள் அவதி

### உதவி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(நயினாதீவு)

நயினாதீவுப் பகுதியில் இராணுவத்தினர் விநியோகிக்கும் உணவுப் பொருள்களிலேயே தங்கியிருக்க வேண்டியிருப்பதால் அங்குள்ள மக்கள் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதாக அப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் தியாகராசா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தபாலகங்கள் இயங்குவ (6 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகலையில் ராணுவம் விவசாயிகள் அவதி

(செங்கலடி)

மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள தொப்பிக்கலையில் தற்பொழுது இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதால் அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மையை அறுவடை செய்ய முடியாமல் அங்குள்ள விவசாயிகள் அவதியுறுகின்றனர்.

மேற்படி விவசாயிகள் அங்குள்ள அரச அதிபரான ஆர். மோனகுருசாமியைச் சந்தித்து இது தொடர்பாகபுகாரிட்டுள்ளனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு வாய்ப்புக்குறைவு யுத்தசூழலே நிலவுகிறது

பேச்சுவார்த்தைக்கான சாத்தியப்பாடு இப்போது இல்லை. தாக்குதலுக்கான வாய்ப்பே அதிகரிக்கின்றது. இவ்வாறு அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி கொழும்புப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜிவ்காந்தி கொலை தொடர்பாக பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதையடுத்து இதற்கான (3 ஆம் பக்கம் பார்க்க)

## ரத்தம் தோய்ந்த நாடாக சிறிலங்கா மாறிவிட்டது

### - பிரேமதாசா கவலை

(கொழும்பு)

சிறிலங்கா ரத்தத்தில் தோய்ந்த நாடாகிவிட்டது என்றுஜனாதிபதி ஆர். பிரேமதாசா கவலை தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப் பாட்டைக் காப்பதற்காக ஒன்றுமறியாத அப்பாவி மக்களின் இரத்தம் சிந்தப்படுவது வேதனை தரும் விஷயம் என நேற்று சிறிலங்காவின் 44 வது சுதந்திரதின நிறைவை ஒட்டி அவர் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

நாட்டில் நடந்து கொண்டி (6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாதிட்டம்நிராகரிப்பு மேற்கு தூதர்கள் அதிருப்தி

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வுக்கென அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகள் தொடர்பாகத் தெற்கில் எழுந்துள்ள இனவாத அலை மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் மட்டத்தில் அதிருப்தியை எழுப்பியுள்ளது. இது எதிர்வரும் வெள்ளியன்று பாரிசில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சிங்களக் குடியேற்றத்தை விரைவுபடுத்த புதிய திட்டம்

[கொழும்பு]

திருக்கோணமலையில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் துரித அபிவிருத்தியை மேற்கொள்வது என்ற போர்வையில் புதிய திட்டமொன்று சிறிலங்கா அமைச்சரவையால் வகுக்கப்பட்டுள்ளது. ''ட்ரிங்கோ பிளான்'' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும் இத்திட்டத்தை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட் (6ஆம் பக்கம் பார்க்க)

# விசைப் படகு மூழ்கடிப்பு 4 கடற்படையினர் பலி

## நீரேரியில் கடற்புலிகள் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் சிறிலங்காகடற்படைக்குச்சொந்தமான அதிவேகப்படகு ஒன்று விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் மூழ்கடிக்கப்பட்டது இதில் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன் தினம் காலை 8.55 மணியளவில் பூநகரியில் இருந்து ஆனையிறவுநோக்கிச் சென்றுகொண்டிருந்த இவ் விசைப்படகின் மீது புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதல் ஒன்றிலேயே 41 அடி நீளமான இப்படகு மூழ்கடிக்கப்பட்டது விடுதலைப்புலிகளின் இத்துணிகர, சாதுரியமான தாக்குதலினால் இப்படகில் பயணம் செய்த நான்கு கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.

வெளிநாட்டில் பெருந்தொகைப்பணத்திற்குக் கொள்வனவுசெய்யப்பட்ட இப்படகு கடந்த வருடம் ஆனையிறவில் நடந்த பெரும் போரின்போது கட்டைக்காடு - வெற்றிலைக்கேணித் தரையிறக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை யாழ். குடாக்கடல் நீரேரியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்ட இரண்டாவது படகு இதுவாகும். கடந்தவருடம் டிசம்பர்மாதத்திலும் இப்பகுதியில்புலிகளால் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதும், ஏழு கடற்படையினர் அதில் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

(6ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடற்பரப்பில் மீனவர்மீது துப்பாக்கிச் சூடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருகின்றனர். இதனால் பல மீனவர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களின் பெறுமதிமிக்க உபகரணங்களும், படகுகளும் சேதமடைந்துள்ளன.

கடந்த முதலாம் திகதி முல் (6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைதான மூவர் பற்றிய தகவலில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை கடற்கரைச் சேனையில் கடந்த ஞாயிறன்று சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களின் கதி என்னவாயிற்று என இதுவரை தெரியவில்லை.

கைது செய்யப்பட்ட இந்த மூவர் பற்றி அவர்களின் உறவினர்கள் விசாரித்தபோது, தாம் எவரையும் கைது செய்யவில்லை என இராணுவத்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பிலாந்துறைக் கிராமத்தில் நான்கு தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அம்பிலாந்துறை கிராமத்தினை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவமும் தேசவிரோதிகளும் அங்கு நான்கு அப்பாவி தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்தபின் சுட்டுக் கொன்றுள்ளனர். இந்த சம்பவம் கடந்த ஞாயிறு காலை இடம் பெற்றுளளது. பல தமிழ் இளைஞர்கள் இவர்களால் சித்திரவதை செய்யப் பட்டும் உள்ளனர்.

கோபாலரத்தினம் யோகன் (குருக்கள்மடம் வயது 24) சின்னத்தம்பி மகேந்திரராசா (அம்பிலாந்துறை வயது 24), எதிர்மன்னசிங்கம் விஜயராசா (வயது 27), நல்லதம்பி பாகரன் (வயது 25) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களாவர்.

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## மேஜர் சலீம்

**(அல்போண்ஷஸ் ஜோண்பிறின்ஸ்ரன்)**

வீரஜனனம்: 27- 1- 69 வீரச்சாவு: 5- 2- 91

ஆண்டொன்று கடந்தின்றும் ஜோண் பிறின்ஸ்ரன்
ஆண்மையுறு அழகுமுகம் அகத்தே நின்று
மாண்டிடினும் மண்நமது சொந்தமென்று
மாண்புடனே கூறுவதும் மாசிஐந்தில்
தாண்டவீர்பத் தொன்புயிரைத் தச்சன் காட்டில்
தாண்டவன ர் பறித்ததுவும் மனத்திருந்து
தூண்டுதடா மண்மீட்பை எல்லாமாகத்
தூண்டுகிறோம் திருவடியை நாங்களிங்கு!

இல 16, ''சலீம்'' வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

உன்னை மறவாத
அம்மா
சகோதர சகோதரிகள்
உற்றார், உறவினர்
நண்பர்கள், பாஷையூர் மக்கள்.

(2183)

# பொது அறிவித்தல்
## யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சகல வியாபார நிறுவனங் ளும் 1992 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தினை 29 02.92 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

உரிமம் பெறத்தவறும் வியாபார நிலையங்கள் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252, பிரிவுகள் 247, 267 இன் பிரகாரம் தடைசெய்யப்படுவதுடன் மேலதிக தண்ட விதிப்பனவுக்கும் உள்ளாக நேரிடும் என்பதைக் கவனத்திற் கொண்டு வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் 1992 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்று ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே.பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28.01.1992.

(சி/3886)

## வரி விளம்பரம்

### பழைய அரசியற் புத்தகங்கள்

இயக்கங்களின், கூட்டணியினரின் மற்றும் ஈழத்து அரசியற் புத்தகங்கள், பத்திரிகைகள் தற்போதைய பெறுமதியில் பெற்றுக்கொள்ளப்படும். யாழ். பழைய புத்தகக்கடை, 32, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (2159)

### திசைகோட் பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பகுதியில், கல்வி அபிவிருத்திக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்களுக்கான திசைகோட் பயிற்சி வகுப் எதிர்வரும் சனிக்கிழமைதொடக்கம் திங்கட் கிழமை வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், சகல ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறும் இதற்குப் பொறுப்பான நிர்வாகக் கல்வி அதிகாரி திரு. இ கணேசன் தெரிவித்துள்ளார். (மு)

### இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவானந்தன் மருதனாமடம் கல்விக் கோட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக திரு. சிவகுருநாதன் கல்வித்திணைக்களத்தினால் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலைய கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (9.2 92) பிற்பகல் நான்கு மணியளவில் நடை பெறவுள்ளது.

வே. வேந்தனார் தலைமையில் நடைபெறும் மேற்படி கலந்துரையாடல் நல்லூர்சந்த சுவாமி கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது. நிலைய உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது.

### மஹோற்சவம்

(பருத்தித்துறை)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை (8-2-92)கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று பதினோராம் நாளான செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும்புதன்கிழமைஅன்னதான நிகழ்ச்சியும் நடை பெறவுள்ளன.

# நினைவு கூருகின்றோம் 1992-02-05

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை முகாமிலிருந்து சிறிலங்காப் படையினரால் நடத்தப்பட்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 4 பெண்கள் உட்பட 8 பொதுமக்கள்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

- **துரையப்பா குமாரசாமி** (ஆயித்தியமலை, மட்டக்களப்பு)
- **நாகமணி கந்தசாமி** (மகிழவெட்டுவான், மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு சேனைக்குடியிருப்பில் இந்தியப் படையினருடனானமோதலின் போது வீரச்சாவெய்திய

**துரை** (முத்தையா வில்வராசா - நற்பிட்டி முனை, அம்பாறை)

1989 ஆம் ஆண்டு அச்சுவேலியில் இனங்காணப்படாத நிலையில் தவறுதலாகச் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

- **பேபி** (தேவராணிமுருகதாஸ்-மயிலணி,சுன்னாகம்)

நவாலியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**கந்தசாமி சண்முகசுந்தரம்** (நவாலி) மற்றும் 4 பொதுமக்கள்.

1991 ஆம் ஆண்டு தச்சன்காட்டுச்சந்தி சிறிலங்காப் படை மினிமுகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய

**மேஜர் சிறி** (கதிர்காமத்தம்பி ராஜசிறி - கல்வயல், சாவகச்சேரி)
**மேஜர் சலீம்** (அல்போண்ஷஸ் ஜோண்பிறின்ஸ்ரன்- 16,1 ஆம் குறுக்குத்தெரு. பாஷையூர்)
**கப்டன் கேதீஸ்** (பாக்கியராசா றொபேட்நிக்சன்- 443, பாரதி புரம், திருக்கோணமலை)
**கப்டன் தீபன்** (சிவலிங்கம் ஜெபசீலன் - அலஸ் தோட்டம், சாம்பல் தீவு, திருக்கோணமலை)
**கப்டன் அக்பர்** (மாணிக்கம் யோகேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம்)
**கப்டன் அஜித்தன்** (சோழராசா ஜெகதீஸ்வரன்- தாவளை, இயற்றாளை, வரணி)
**லெப். மணிமாறன்** (சின்னத்தம்பி மகேந்திரராசா பதுளைவீதி, கரடியனாறு, மட்டக்களப்பு)
**லெப். பேனாட் ஜெகன்** (அரவிந்தராசா நிர்மலன் செல்வநாயகபுரம், திருக்கோணமலை)
**லெப். ஜேம்ஸ்** (கந்தையா ஜெயக்குமார் - பெரிய தம்பிரான் கோயிலடி, அராலிதெற்கு)
**லெப். அசோக்** (முருகன் இராசகுமார் - இடைக்குறிச்சி, வரணி)
**லெப். சலீம்** (கதிரவேலு பூபாலசிங்கம் - மட்டுவில் வடக்கு)
**லெப். சுதன்** (சின்னப்புஜூட் ஜெயசீலன்-மிருசுவில்)
**லெப். கரரூபன்** (தயானந்தன் ரூபானந்தன் ஊத்துச்சேனை, வடமுனை, மட்டக்களப்பு)
**2-ம் லெப். நகுலேஸ்** (குமாரசிங்கம் சத்தியசீலன் செக்கட்டிப்புலவு, வவுனியா)
**2-ம் லெப். இலங்கேஸ்** (மாசிலாமணி சிறிதரன் மீசாலை தெற்கு)
**எட்வேட்** (மயில்வாகனம் தயாபரன் - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை)
**சிவசோதி** (கணபதிப்பிள்ளை ரவீந்திரன்-1-ம்குறிச்சி வீதி, தம்பிலுவில்)
**தயாநிதி** (கணபதிப்பிள்ளை கந்தசாமி - வாகனேரி, மருதங்குளம், மட்டக்களப்பு)
**கோபு** (கணபதிப்பிள்ளை தயாபரன்-முதலைக்குடா, மட்டக்களப்பு)
**நந்தன்** (மார்க்கண்டு அழகவேல் - இலுப்பையடிச்சேனை, வேப்பவெட்டுவான் மட்டக்களப்பு)
**திலக்** (இரட்ணசபாபதி மகேந்திரராசா - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)
**பாபு** (கணபதிப்பிள்ளை காந்தராஜன் - சோரன்பற்று பளை)
**அருள்** (பொன்னையா விஜயசேகரன் - நாவற்குழிச் சந்தி, கைதடி)
**நந்தன்** (நல்லதம்பி கோபாலகிருஷ்ணன் - 47/61, இயக்கச்சிச்சந்தி)
**தமிழ்மணி** (இரத்தினம் நிரஞ்சன் - அக்பர் வீதி, கோண்டாவில் வடக்கு)
**லிங்கவேந்தன்** (பிலிப் றொபின்சன் - 23, புதிய பூங்காவீதி, குருநகர்,யாழ்ப்பாணம்)
**கண்ணன்** (கந்தையா பாலகிருஷ்ணன் - இத்தாவில், பளை)
**றோஸ்மன்** (தேவராசா ரவீந்திரராசா - நிலாவெளி, திருக்கோணமலை)
**சதான்** (ஆறுமுகம்நாகேந்திரன்-இயற்றாளை.வரணி)
**யோகர்** (வாரித்தம்பி சசிகுமார் - கைதடி மேற்கு)
**வாசிதர்** (பாலிப்போடி கந்தசாமி - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை)
**ஐங்கரன்** (பாலசிங்கம் விஜயேந்திரன் - பக்கியெல்ல, சின்னவத்தை)
**சுதாகர்** (வெலிச்சோர் றொபேட் கெனடி - இலுப்பைக்கடவை, மன்னார்)
**வினோதன்** (வேலுப்பிள்ளை சுகுமார் - 12, இயக்கச்சிச்சந்தி, பளை)
**ஐங்கரன்** (துரையப்பா உதயன் - மொறக் கொட்டாஞ்சேனை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3887)

# திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் பிரசோற்பத்தி வருடம் தை மாதம் 24ஆம் நாள் (07 - 02 - 1992) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரை உள்ள கும்பலக்ன சுப முகூர்த்த வேளையில்

தளையரட்ண முதலியார் மகன் சங்கரப்பிள்ளை உடையார் வழித்தோன்றல் (செங்காரப்பிள்ளை) கணபதிபபிள்ளையின் ஏக புத்திரன்

**தளையரட்ணம்**

(விஞ்ஞானமானி இறுதியாண்டு வெளிவாரி)

அவர்களுக்கும்

சுப்பிரமணியத்தின் புதல்வி

**மஞ்சுளா**

(ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)

அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
நஷனல் கல்வி நிலையம் - மாணவர் ஒன்றியம்,
பண்டத்தரிப்பு.

(சி/3888)

# பிரேமதாசா


## எப்படிப்பட்ட மனிதர்?

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் பிரேமதாசா முன்வைக்கப் போவதில்லை என்பதை புலிகள் நன்கறிவார்கள். கொழும்பு மாலிகாவத்தை வாசஸ்தலத்தில் இரவிரவாக பிரேமதாசா நடத்திய அரசியல் பிரித் ஓதல்களிலிருந்து இதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஒற்றையாட்சியின் மகத்துவம் பற்றியும், விட்டுக்கொடுப்பின் முக்கியத்துவம் பற்றியும் ஆயுத வன்முறையின் அர்த்தவீனம் பற்றியும். அமைதியான மென்முறையின் ஆன்மீகச் சிறப்பு பற்றியும் தொடர்ந்து நடந்த போதனைகள் புலிகளின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. பிரபாகரன் ஒரு தேசிய வீரர். அவர் இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக பதவியில் அமர்த்தப்பட வேண்டியவர். புலிப்படை சிங்கள இராணுவத்துடன் சங்கமமானால் இந்திய வல்லாதிக்கப் பூதம் இலங்கையை அச்சுறுத்த முடியாது என்று பிரேமதாசா பொறிகள் வைத்துப் பேசிய தன் அர்த்தத்தையும் புலிகள் உணராமல் இல்லை.

கலந்தாலோசனை, கருத்தொற்றுமை எனப்படும் போதிசத்துவரின் தத்துவப் பாதையில் சென்று விட்டுக்கொடுப்பு எனும் சமாதானப் பொறியில் விழுந்துவிட புலிகள் தயாராக இல்லை. பிரேமதாசா தத்துவம் பேசி காலத்தைக் கடத்தி வருகிறார் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பிரேமதாசாவுடன் பேச்சுக்களை நடத்தி, ஒரு நியாயமான நிரந்தரத்தீர்வை காணமுடியாது என்பதை நன்கு புரிந்துகொண்ட புலிகள் ஒரு இடைக்காலத் தீர்வுக்காவது முயற்சி செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தனர். இந்த நோக்கில் இரண்டு கோரிக்கைகளை பிரேமதாசாவிடம் முன் வைத்தனர். அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்கி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பிரேமதாசாவைக் கேட்டுக் கொண்டனர். தற்காலிகமான முறையில் வடகிழக்கு மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்று, புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளில் இறங்கி மக்களின் மேம்பாட்டிற்கு உருப்படியான சில கருமங்களைச் செய்யலாமென புலிகள் எண்ணினர்.

புலிகளின் யோசனையை பிரேமதாசாவால் நிராகரிக்க முடியவில்லை. புலிகளும் சாதுரியமாக காய்களை நகர்த்துகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட அவர் இந்தச் சிக்கலிலிருந்து நழுவிவிட வேறு உபாயங்களைப் பற்றி சிந்தித்தார். ஆறாவது திருத்த சட்டத்தை நீக்க யாப்பு திருத்தப்பட வேண்டும் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை, இது கலந்தாலோசனை, கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் சகல கட்சிகளினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய விவகாரம் என்ற ரீதியில் புலிகளுக்கு நழுவல்கதை சொல்லி வந்த பிரேமதாசா சர்வகட்சி மாநாடு ஒன்றைக்கூட்டினார்.

கட்சி என்ற பெயரில் அரசியல் விபச்சாரம் செய்து வந்த தனிமனித தலைவர்கள், குழுக்கள் எல்லோருக்கும் சர்வகட்சி மாநாடு என்ற மேடை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அரசியல் அஞ்ஞானவாசத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அநாமதேயக் குழுக்களும் மக்களின் பிரதிநிதிகளாக இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். கலந்தாலோசனை என்ற போர்வையின் கீழ், ஒன்றுக்கொன்று முரண்பட்ட,பலதரப்பட்ட கருத்துக்களை உடைய, ஒரு 'சாம்பார்' மாநாட்டில் கருத்தொருமைப்பாடு ஒருபோதும் ஏற்படாது என்பதை போதிசத்துவர் நன்கு அறிவார். தமிழர் பிரச்சினையை முடிவில்லாமல் இழுப்பதற்கும், புலிகளின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் குறைத்து விடுவதற்கும் இது ஒரு சிறந்த 'சனநாயகவழி' என பிரேமதாசா எண்ணினார். இந்த நோக்கில் சர்வகட்சி மாநாட்டிற்கு முதலுரிமை வழங்கிய பிரேமதாசா, புலிகளையும் இம்மாநாட்டில் பங்குபற்றுமாறு அழுத்தம் போட்டார். இந்தப் பொறிக்கிடங்கில் விழுந்துவிட புலிகள் விரும்பவில்லை அத்துடன் இதனைப் பிரச்சினைக்குள்ளாக்கி பேச்சுக்களை முறித்துக்கொள்ளவும் விரும்பவில்லை. இதனால் சர்வகட்சி மாநாட்டில் அவதானிகளாக மட்டும் பங்குகொள்ள புலிகள் இணங்கினர் அவதானிகள் என்ற அந்தஸ்துடன் புலிகள் வெறும் பார்வையாளர்களாக ஒதுங்கிக்கொண்டது பிரேமதாசாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அத்துடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்தி தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு நெருக்குதல் போட்டு வந்ததும் பிரேமதாசாவுக்கு தலையிடியைக் கொடுத்தது.



பிரம்மஞானி

மெல்ல மெல்ல, புலிகளுக்கும் பிரேமதாசாவுக்கும் மத்தியில் முரண்பாடு தலைதூக்கத் தொடங்கியது அரசியல் பிரச்சினைகளைக் கைவிட்டு, ஆயுதக்களைவுப் பிரச்சினைக்கு பிரேமதாசா முதலிடம் கொடுத்தபோது முரண்பாடு மேலும் இறுகியது.

புலிகளை புண்படுத்திவிடக்கூடிய ஆயுதக்களைவுப் பிரச்சினையை பிரேமதாசா நேரடியாகப் புலிகளுடன் பேசவில்லை. தனது ஊதுகுழல்களாக அமைச்சர் ஹமீத்தையும் ரஞ்சனையும் பாவித்தார்.

அமைச்சர் ஹமீத் மிகவும் மென்மையாக, பக்குவமாக, நிதானமாக, ராஜதந்திர மதிநுட்பத்துடன் சிக்கலான பிரச்சினைகளையும் இலகுவாகக் கையாளும் அரசியல்வித்தகர். இதற்கு முற்றிலும் மாறான ஆளுமை படைத்தவர் அமைச்சர் ரஞ்சன். பண்பான கடிவாளங்கள் எதுவுமின்றிக் காத்திரமாகப் பேசுபவர். மூர்க்கமாக மோதுபவர். எண்ணத்தை சொல் ஆடைகளால் அலங்கரிக்காமல் நிர்வாணமாக வெளிக்காட்டுபவர். இந்த இரண்டு எதிரும் புதிருமான நாக்குகளால் பிரேமதாசா பேசினார்.

அமைச்சர் ஹமீத் மிகவும் சாதுரியமாக ஆயுதப் பிரச்சினையைத் தொட்டார். ஆயுதப் போராளிகளின் எதிர்காலம் பற்றித் தொடங்கி, ஆயுத பாணிகளாக புலிகள் நடமாடினால் நிராயுதபாணிகளான ஏனைய குழுக்கள் சுதந்திரமாக தேர்தலில் பங்குகொள்ள முடியாது எனச் சுட்டிக்காட்டி, சிறிலங்கா இராணுவத்தில் புலிப்படை இணைந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மாகாண சபைத் தேர்தல் நடத்துவதென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து, இராணுவ அமைப்பைக் கலைத்துவிட வேண்டும் என்பதைச் சுற்றி வளைத்து சொற் சிலம்பம் ஆடி பக்குவமாகப் போட்டார் ஹமீத். பிரேமதாசா என்ற அரசனை நம்பி, ஆயுதம் என்ற கணவனைக் கைவிடுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை புலிகள் விளக்கினர். கல்லில் நார் உரித்தாலும் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது சாத்தியமில்லை என்பதை அமைச்சர் ஹமீத் உணர்ந்து கொண்டார்.

அமைச்சர்ரஞ்சனின் அணுகுமுறை வித்தியாசமானது. ஆயுதப் பிரச்சினை பற்றி அவர் புலிகளுடன் நேரடியாகப் பேசவில்லை. பத்திரிகையாளர் மாநாடுகளில் புலிகள் இயக்கத்தைப் பகிரங்கமாக மிரட்டினார். புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். அல்லாது போனால் ஆயுதங்களைப் பறிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழும் என்ற ரீதியில் பேசினார். ரஞ்சனின் இந்த ஆத்திரமூட்டும் அறிக்கைகள் பற்றி புலிகள் பிரேமதாசாவிடம் முறையிட்டனர். ''அவர் கரடு முரடாகத்தான் பேசுவார். ஆனால் மென்மையான உள்ளம் படைத்தவர். அவர் கூறுவதைப்பற்றி வீணாக அலட்டிக்கொள்ள வேண்டாம்.'' என்று பிரேமதாசா புலிகளை சாந்தப்படுத்தினார். யாருடைய கருத்துக்கள், யாரால், எந்த நாக்கினால், எதற்காகச் சொல்லப்படுகிறது என்பதை புலிகள் புரிந்துகொண்டதால் அவர்கள் இதுபற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

இது இவ்வாறிருக்க கொழும்பு அரசியல் அரங்கில் இன்னொரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இத்தனைகாலமும் இந்திய அரசின் கைப்பொம்மைகளாகச் செயற்பட்டு, வடகிழக்கு மாகாண ஆட்சிபீடம் ஏறி, திருமலை நகரில் அரை மைல் விஸ்தீரணமுடைய முள்ளுக்கம்பி வேலிக்குள் ஆட்சியை நடத்தி விரக்திகண்ட ஈ பி.ஆர்.எல்.எவ். இயக்கம் பிரேமதாசாவின் காலடியில் விழுந்தது. ஈ.பி. தலைவர்களுடன் பிரேமதாசா இரகசியப் பேச்சுக்களை நடத்தியது புலிகளுக்குச் சினத்தை ஊட்டியது.

சர்வகட்சி மாநாட்டில் அவதானியர் என்ற அந்தஸ்திலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டனர் புலிகளுக்கு எதிரான தமிழ் விரோதக் குழுக்கள் பிரேமதாசாவின் மாயவலைக்குள் சிக்குப்பட்டன.

(தொடரும்)

---

டடா

கூறியதுண்டா?

இதை மறைப்பதற்காக பத்மநாபா கொலை வழக்கு என்கிறார்கள் இப்படிக் கூறினால் மக்கள் விலைவாசியை மறந்து விடுவார்களா?

தமிழ்நாடடுக்கு 91 - 92 ஆம் ஆண்டில் கலைஞர் கேட்டது 1600 கோடி ரூபாய். இந்த முதல்வரோ 1751 கேட்டார். அனுமதிக்கப்பட்டது. 1486 கோடி ரூபா.

சிறப்பான வரவு செலவு திட்டம் தயாரித்ததற்காக ஆந்திராவின் முதன் மந்திரி ஜனார்த்த ரெட்டியை மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி பாராட்டியிருக்கிறார். ஆனால் தமிழக முதல்வரைப் பாராட்டவில்லை.

இங்கே பொங்கல் விழாவுக்காக மகாபலிபுரத்தில் ஆறரை இலட்சம் ரூபாவில் மேடை அமைக்கப்படுகிறது. முதல் நாள் நிகழ்ச்சிக்கு ரூபா பன்னிரண்டு இலட்சம் செலவு, 2ஆம் நாள் செலவுக்கு அரசுப் பணமாக 25 இலட்சம் பாழடிக்கப்பட்டு இருக்கிறது. இது தான் இங்குள்ள சிக்கன நடவடிக்கையா? இந்த விழாவினை கலைவாணர் அரங்கிலோ வள்ளுவர் கோட்டத்திலோ ஏன் நடாத்தியிருக்கக் கூடாது?

விழுப்புரத்திற்கு ஜெயலலிதா சென்றபோது மேடையில் அமைக்கப்பட்ட கழிவறையில் 46 ஆயிரம் ரூபா மதிப்புள்ள வாசனைத் திரவியம் வைக்கப்பட்டது. இவருடைய பாதுகாப்புக்கு மட்டும் இருபத்தையாயிரம்பொலிஸார்

ஈரோட்டுக்கு நாளை மறுநாள் ஜெயலலிதா வருகிறார் என்றால் இன்றே கொசு மருந்து அடிக்கிறார்கள்.

சென்னையில் அன்புகம் எதிரே இரண்டாயிரம் குடிசைகள் எரிந்து சாம்பலகிய போது ஜெயலலிதாவோ அல்லது வேறு அமைச்சர்களோ வந்து பார்வையிடவில்லை. ஆனால் தி மு க ஆட்சியில் தீவிபத்து நடந்த போது எரியும் தீ நடுவில் கலைஞர் நின்று பார்வையிட்டார்.

ராஜீவ் காந்தி மறைந்த துக்கம் மக்களுக்கு தெளிந்துவிட்டது ஆறுமாத துக்கம் தெளிந்த மக்கள் தி மு க பக்கம் வந்தே தீர்வார்கள் என வும் தெரிவித்தார்.

## மேஜர் தயாபரன் உருவப் படம் திரை நீக்கம்

ஈச்சங்குளம் சந்தியில்மேஜர் தயாபரனின் ஆளுயர உருவப் படம் திரை நீக்கம் செய்யப் பட்டது

கடந்த முதலாம் திகதி மாலை இடம் பெற்ற இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேஜர் தயாபரனின் பெற்றோர் அந்த உருவப்படத்திற்கு குத்து விளக்கேற்றி திரைநீக்கம் செய்தனர். இந்த நிகழ்வில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## சிலரிடம் அணுவாயுதம் இந்தியா எதிர்க்கும்

- நரசிம்மராவ்

(தேராஸ்)

சில நாடுகள் மட்டும் அணு ஆயுத வசதிகளைத் தக்க வைத்துக்கொள்ள முயல்வதை இந்தியா முற்றிலும் எதிர்ப்பதாக இந்தியப் பிரதமர் பி வி. நரசிம்மராவ் கூறினார். சுவிற்சலாந்தின் தேராஸ்நகரில் உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இத்தகைய முயற்சி எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும், போர்க்குமுறல்நிலையையும் கீழை, மேலை நாடுகளின் பகைமைப் போக்கும் முடிவுக்கு வந்திருப்பதையும் சுட்டிக்காட்டினார். வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையே பகைமைச் சூழலை ஏற்படுத்தி விடக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். வளர்ச்சிப் பணிகளைச் சரியாகக் கவனிக்காவிட்டால் உலகில் புதிய ஜனநாயகச் சூழலைப் பராமரிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

பேச்சுக்கு

வாய்ப்பு அங்கரித்துக் காணப்பட்டாலும் பெப்ரவரி ஏழாம் திகதி பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தின் முடிவுக்காக இலங்கை அரசுகாத்திருப்பதாகவும்தெரியவந்துள்ளது எனவும் அவை குறிப்பிட்டுள்ளன.

## அரசியல் எதிரிகளை ஒடுக்க டடா சட்டம் பயன்பாடு

### ஆளுநரிடம் தி. மு. க. ஆட்சேபம்

(சென்னை)

டடா சட்டம் தமிழ் நாட்டில் அரசியல் எதிர்ப்பாளர்களை ஒடுக்கப் பயன்படுகிறது என திராவிட முன்னேற்றக்கழகம் நேற்று முன்தினம் தமிழக ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ள மனு ஒன்றில் தெரிவித்துள்ளது

சென்னையில் தி. மு. க தலைவர் மு. கருணாநிதி தலைமையில் ஊர்வலமாகச் சென்ற அந்தக் கட்சியினர், தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயணசிங்கிடம் மனு ஒன்றைச்சமர்ப்பித்தனர்.

டடா சட்டத்தின்கீழ் இப்போது உள்ள வழக்குகளை உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களில் விசாரணை செய்ய வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகள் அந்த மனுவில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோரின் பட்டியலும் இந்தமனுவில்இணைக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார கொள்கை மத்திய அரசின் விவகாரம் என்றும் புலிகளுக்கு ஆயுதமும் பயிற்சியும் நிதி உதவியும் வழங்கியது மத்திய அரசுதான் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆதரவு இந்திய இராணுவத்தினருடனான சண்டையின் பின்னரும் தொடர்ந்தது.

ராஜீவ் கொலையின் பின் தான் இந்தியாவின் புலிகள் பற்றிய கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது 1983 ஆம் ஆண்டு தொடக்கம் புலிகள் தொடர்பாக மத்திய அரசின் நிலைப்பாடு பற்றி ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் அம் மனுவில் கூறப்பட்டுள்ளது.

## 1 ஆம் வருட வீரஅஞ்சலி



வீரவேங்கை

### கந்தையா - பாலகிருஷ்ணன்
### (கண்ணன்)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 1973- 07 08 | 1991- 02- 05 |

எம் கண்ணா!
மண்காக்க விண்சென்ற வீரமறவா,
மண்ணிற்காய் மடிந்தின்று ஆண்டொன்று
ஆனதப்பா, மாறாது எம் உள்ளம்
உம் நினைவால், புண்பட்டு புளித்த
நெஞ்சங்கள் நாம் இன்று உம் இழப்பை
தாங்காது தாங்கி தவிக்கிறோமையா. அண்ணனின்
பாதையில் சென்று நீ அண்ணனின் நாமத்தை
சூட்டி நீ இன்று மாவீரராய்
மலர்ந்திட்டாயே, மணம் மாறா மலராய்
நீ மடிந்திட்டாலும், ஈழத்தில் உம் உதிர்வு
தமிழருரிமைக்கு உரமாகட்டும்,
உம் கல்லறை மலர நாம் கண்ணீர் சிந்துகின்றோம்,

உம் நினைவால் துடித்து துயருறும்,

பாபு வீதி — தாய், சகோதரர்கள்,
கண்ணன் — சகோதரிகள், நண்பர்கள்
இத்தாவில், பளை.

இவருடன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட ஏனைய 29 வீரவேங்கைகளையும் நினைவு கூருகின்றோம்.

(2170)

# டடா சட்டத்தைக் காட்டி தி. மு. காவை பயமுறுத்த முடியாது

## முன்னாள் அமைச்சர் துரைமுருகன்

(சென்னை)

பயங்கரவாத மற்றும் டடா சட்டத்தையும், பத்மநாபா கொலை வழக்கையும் காட்டி திராவிட முன்னேற்றக்கழகத்தை பயமுறுத்த முடியாது என தமிழ் நாடு மாநில முன்னாள் அமைச்சர் துரை முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வைக் கண்டித்து சென்னைக்கு அருகே ஆலடி எனும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில்,

தேர்தலின் போது நூறு நாளில் விலையை குறைப்போம் என்று காங்கிரஸார் கூறினார்கள். ஆனால் நாளுக்கு நாள் விலைவாசி தான் ஏறிக் கொண்டு செல்கிறது. விலையைக் குறைக்க முடியாது எனவும் நிதிமந்திரி மன்மோகன் சிங் கூறிவிட்டார்.

எனவே முதன் மந்திரி ஜெயலலிதாவுக்கோ அல்லது மற்றும் மந்திரிகளுக்கோ விலைவாசி பற்றி எதுவும் தெரிவதில்லை. அவர்களுக்கு தெரிவதெல்லாம் வசூல் செய்வது, பேணர்கட்டுவது விழா கொண்டாடுவது தான்.

கடந்த தேர்தலில் மக்கள் தெளிந்த சிந்தனையில் ஓட்டுப் போடவில்லை. துக்கத்திலும் மனத்தெளிவு அற்ற நிலையிலுமே ஓட்டுப் போட்டார்கள். எனவே வாக்காளரிடம் வாக்குகள் ஏமாற்றி பறிக்கப்பட்டுள்ளன. எனவே இது நீதிப்படி சட்டப்படி செல்லுபடியாகாதது ஆகும்.

நம்மை ஏமாற்றி விட்டார்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். எனவே இந்த மக்களை மீண்டும் ஏமாற்றவே பத்மநாபா என்கிறார்கள், டடா என்கிறார்கள்.

தி மு க வினரை டடாவில் கைது செய்தால் தி.மு.க அழிந்து விடும் என ஜெயலலிதா கருதுகிறார்.

உன்மீது பாம்பை விட்டு விடுவேன் என்று பாம்பாட்டியை மிரட்டினால் பயப்படுவானா?

டடா என்றால் தி. மு. க தடம் புரண்டுவிடும் என்று தப்புக்கணக்கு போட்டார்கள் டடாவுக்குப் பிறகு தான் தி. மு. க. தொண்டர்கள் மதுரை மகாநாட்டில் சிலிர்த்து நின்றார்கள்.

வாழப்பாடி ராமமூர்த்தி கூறுகிறார் தி. மு. க சாகவில்லை. அது அப்படியேஇருக்கிறது என்று. ஆம் இந்த இயக்கத்தை யாராலுமே அழிக்க முடியாது.

இந்த ஆறு மாதத்தில் அ. தி. மு. க அரசு செய்த ஒரு சாதனையாவது கூறமுடியுமா?

நாங்கள் பெற்றுக் கொடுத்த நடுவர் மன்றத் தீர்ப்பைக் கூட இவர்களால் அமுலாக்க முடியவில்லை. பிரதமர் கூட வாயைத் திறக்க மறுக்கிறார். நேரடியாக மத்திய அரசை சவால் விட்டுக் கேட்க முதல்வருக்கு தைரியம் இல்லை. இவரை மதித்ததன்றும் நரசிம்மராவ் இதுவரை பதில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வலிவடக்கு ஓய்வூதியர் சங்கம்
## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:- 1992 2-9 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.00 மணி

இடம்:- மல்லாகம் இந்து மகாவித்தியாலயம்

சகல அங்கத்தவர்களும் மற்றும் சகல ஓய்வூதியம் பெறுபவர்களும் தவறாது சமுகம் தருக.

1991ஆம் ஆண்டுக்குரிய சந்தா ரூபா 24/- வழங்கிச் சங்க வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்

சங்கப் பணிமனை,
காசிப்பிள்ளையார் கோயிலடி,
தெல்லிப்பளை.

(2163)

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)
## பதவி வெற்றிடங்கள்

(1) கணக்காளர் - 104 : 8
(2) வங்கிச் சேவைமுகாமையாளர் - 118:8

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவையில் உள்ளஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (விண்ணப்பப் படிவங்களை எமது சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.)

இப் பதவிகளுக்கான வயதெல்லை 18 முதல் 40 வயது வரையாகும். (சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது) மேலும் கல்வித் தகைமைகள், வேதனம் பற்றிய விபரங்களை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு அதன் பிரகாரம் உங்கள் விண்ணப்பங்களை கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''தலைவர் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 1992.02.10 ஆம் திகதி பகல் 12-00 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''என்ன பதவிக்கு விண்ணப்பிக்கின்றீர்களோ அப்பதவியின் பெயர்'' குறிப்பிடல் வேண்டும்.

(03-02-1992)

(சி-3890) - பொதுமுகாமையாளர்


□ பாடநூல்கள் □ மாணவர் வினாவிடைகள் □ பயிற்சி வினாக்கள் □ பாடப்பதிவேடு
□ ஆய்வுக்கட்டுரைகள் - பழைய, புதிய நூல்கள் கட்டுதல் □ நினைவு மலர்கள்
□ கல்லூரிச் சஞ்சிகைகள் - மலர்கள் □ பாடசாலை வசதிகள் சேவைகள் பற்றுச்சீட்டுகள்
□ படிவங்கள் கடிதத் தலைப்புகள் □ திருமண அழைப்புகள் □ புதுமனைப் புகுவிழா அழைப்புகள்
□ லேபிள்கள் □ பில் புத்தகங்கள் □ மருந்துச்சாலை என்வலப்புகள் □ துண்டுப்பிரசுரங்கள்
□ அறிக்கைகள் □ பேரேடுகள்

இன்னும் பிற அச்சுவேலைகள்

அழகு வர்ணத்தில் கண்கவர் கோலத்தில்
காலமெல்லாம் காத்திட மலிந்த விலையில் மன நிறைவுடன் இயற்றிட
அனுபவமும் ஆற்றலும்
ஒருங்கிணைந்து இயங்கும் ஓர் இடம்

பாரதி பதிப்பகம்
A.B.PRINTERS

உரிமையாளர்: இ. சங்கர்

(சி-3884)

430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## சிந்தனைக்கு

எல்லாம் சீர்குலைந்திருக்கும் போது கூட,
இனிதே நடக்கிறது என்று சாதிக்கும் பித்துக்கு
மிகை உற்சாகம் என்று பெயர்

- வால்ட்டேயர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 05-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஆக்கிரமிப்பிற்கு அடிமைகள் ஆலோசனை

"யுத்தம் நடைபெறும் பகுதிகளில் பொதுமக்கள் பாதிப்புறா வண்ணம் படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என கடந்த சனிக்கிழமை சிறிலங்கா ஜனாதிபதியை முன்னாள் நல்லூர் எம்.பி. திரு. சிவசிதம்பரம் தலைமையில் சந்தித்த கூட்டணி உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அதாவது சிங்களஆக்கிரமிப்பு இராணுவம் எப்படிநடந்து கொள்ள வேண்டும் என 'முன்னர் தமிழீழம் கோரிய தேசபக்தர்கள்' ஆலோசனை தெரிவித்துள்ளார்கள்.

உலகிலுள்ள நாடுகள், மனிதநேய ஸ்தாபனங்கள் பலவும், சிறிலங்காவில் உள்ள சில அரசியற் கட்சிகளும் யுத்தத்தை உடன் நிறுத்துக. இதனால் ஏற்படபபோவது பேரழிவே ஒழிய நன்மை ஏதும் விளையடபோவதில்லை.மக்கள்தான் பெருமளவில் துன்பத்தை அனுபவிக்க வேண்டி வரும் என வற்புறுத்தி வரும் வேளையில், தமிழர் விடுதலைக் கூட்டணியினரோ யுத்தத்தை நிறுத்துமாறு கோரவில்லை. நீங்கள் தமிழ் மண்ணை ஆக்கிரமியுங்கள் மக்கள் பாதிப்படையாமல் என ஆலோசனை கூறியுள்ளார்கள். தமிழ் தேசிய இனப் போராட்டத்தை அடக்குவதற்கு சிறிலங்காவிற்கு மறைமுகமாக உதவி வரும் இந்தியா கூட வெளிப்படையாக இராணுவ நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை. ஆனால், கொழும்பில் பேரினவாதத்திற்கு அடிவருடும் சக்திகள் ஆக்கிரமிப்பிற்கு ஆலோசனை கூறுகின்றன.

யாழ். குடாநாட்டில் சுமார் பத்து லட்சம் மக்கள் இருக்கின்றார்கள். இப்பகுதியில் ஓர் யுத்தம் மேற்கொள்ளப்பட்டால், மக்கள் பாதிப்படைவார்கள். 5000 முதல் 10,000 வரையில் மக்கள் இறக்க நேரிடும் சொல்லொண்ணாத் துயரம் அடைவார்கள் என சர்வதேச மனிதநேய ஸ்தாபனங்கள் வற்புறுத்தி வருகின்றன. இந்நிறுவனங்கள் இதனைத் தமது அனுபவ ரீதியாகக் குறிப்பிடுகின்றன.

இராணுவ நடவடிக்கை என்பது திட்டங்களை முன்கூட்டியே வெளியிட்டுச் செய்யக்கூடியதொன்றல்ல. அத்தோடு தமிழ்ப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கு தாக்குதலில் இறங்குவதற்குத் தயாராக இருப்பதோ இனவாதத்தில் ஊறிப் போயுள்ள இராணுவம். இதனை மனித நேய ஸ்தாபனங்கள் தெளிவாக உணர்ந்துள்ளன. அத்தோடு தமது இனத்தவரையே ஒரு லட்சம் அளவில் கொன்று குவித்த இராணுவம் மேலும், போர்க்களத்தில், பாதிப்புக்கள் என்பது தவிர்க்க முடியாமலும் ஏற்படக் கூடியவையாகும். விமானக் குண்டுவீச்சோ அன்றி எறிகணைத் தாக்குதலோ சரியான இலக்கின்மீது நடைபெறுகிறது என்பதை எதிரியால்கூட உறுதிப்படுத்த இயலாது. இந்த நிலையில் யுத்தத்தை மக்களுக்குப் பாதிப்பின்றி நடத்துமாறு கேட்பவர்கள் நேரடியாகத்தானும் யுத்த அனுபவங்களைப் பெறாதவர்கள் மட்டுமல்ல, உலக யுத்த நிகழ்வுகளைக் கண்டோ அன்றிக் கேட்டோ அறியாதவர்களாவர்.

இவர்கள் நிகழப் போகும் யுத்தத்தில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பது இருக்கட்டும். இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் தமிழ்ப்பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை முதலில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கட்டும். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து பிரதேசங்களை மீட்கும்போதுதான் மக்களுக்கு சேதம் ஏற்படும் எனக் கருதினால் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் யாரால் ஏற்படுகின்றன. அதனை முதலில் நிறுத்த இவர்களால் முடியுமா?

விடுதலைப் புலிகளை அழித்து விட்டால் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாதுகாப்பில், தமிழர் பிரதேசத்தில் தமது இராஜதானியை நடத்தலாம் எனக் கொழும்பிலுள்ள கூட்டணி போன்ற சில அமைப்பிலுள்ளோர் கருதுகின்றனர். ஆனால், அது அவர்களின் பகற்கனவாகவே முடியும். ஒன்று புலிகள் தமிழரின் உரிமைப் போராட்டத்தை வழி நடத்துபவர்கள். இதனால், தமிழ் மக்களையும் அவர்களையும் பிரித்து விடமுடியாது. இரண்டு, புலிகள் இருக்கும் மட்டுமே கொழும்பிலுள்ள 'முன்னாள் தேச பக்தர்களுக்கு' தெற்கில் அரவணைப்பு. புலிகள் தோற்கடிக்கப்படுவார்களானால் அன்றே இவர்களும் விரட்டப்படுவார்கள். இதையும் இவர்கள் மறந்துவிடக் கூடாது.

# எச்சந்தர்ப்பத்திலும் போராட்டத்தை எதிரியிடம் விற்றுவிட மாட்டோம்

## மேஜர் குமுதன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் தினேஷ்

நாம் எந்தச்சந்தர்ப்பத்திலும் எமது போராட்டத்தையும், எமது போராளிகளின் தியாகங்களையும், நாம்பெறவேண்டிய உரிமைகளையும் விற்பதற்குத்தயாராயில்லை. எமது விடுதலைப் போராட்டக் குழந்தை இருபது வயதைத்தாண்டித் துடிப்போடு நடந்து கொண்டிருக்கிறது. அது தமிழீழம் என்கின்ற இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

கடந்த முதலாம்திகதி இரவு மேஜர் குமுதனின் நினைவாக குமுத நகரில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச்செயலகப் பிரதிநிதி திரு. தினேஷ் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது,

இன்றுஎதிரியே வெட்கத்தை விட்டு எமது வீரத்தைச்சொல்லும் அளவிற்கு நாம் பலமாகவே உள்ளோம்.

இந்தியவல்லாதிக்க அரசாங்கம் எமது போராட்டத்தை நசுக்க வந்து தோல்விகண்டு சென்ற வரலாறுஉங்கள்அனைவருக்கும் தெரியும்.

தொண்டமானின் தீர்வுத் திட்டம் மூலம் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது பேச்சுவார்த்தை என்பது போராட்டத்தின் ஓர் அங்கம். அதுதான் தீர்வு என்று எவரும் எண்ணிவிடக்கூடாது.

தொண்டமானை எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குபயன்படுத்த பிரேமதாசா நினைத்தார். அத்திட்டம் வெற்றிபெற்றால், தனது திட்டம்என்றுசொல்லிக்கொள்வதற்கும், தோல்விகண்டால் இ.தொ.காவின் திட்டம் என்றும் கூறுவதற்கும் அவரது நரிமூளைத் திட்டமிட்டது.

இதில் நாம் அடைந்தவெற்றி ஒரு சிறிலங்கா அமைச்சர் மூலமே எமது போராட்டத்தின் நியாயத்தைப் பேச வைத்துவிட்டோம். இந்திய - சிறிலங்கா அரசுகள் எமது போராட்டத்தைப் பற்றிப் பிழையான பிரசாரங்கள் செய்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் நாம் ஓர் உன்னத இலட்சியத்திற்காகவே போராடுகிறோம். எமது விடுதலைப் போராட்டம் புனிதம் நிறைந்தது என்பதைத் தொண்டமான்மூலம் உலகத்திற்கு உணர்த்தியுள்ளோம்.

அவர் மேஜர் குமுதனைப் பற்றிப் பேசும்போது, இங்கு காற்றுக்கூட தொடர்ந்து வீசுவது மாவீரன் குமுதனிடம் இருந்து கற்றுக்கொண்டதோ என எண்ணவேண்டியுள்ளது. இங்கு மரங்கள், பறவைகள் வாய்திறந்துபேசுமாயின் இங்கு நாம் பேசவேண்டிய தேவை இருக்காது. அவைகள் தான் எம்மைவிட எமது மாவீரர்களின் எண்ணங்களையும், உழைப்பையும், இலட்சியத்தையும் அதிகமாக அறிந்து வைத்திருக்கின்றன என்றார்.

வவுனியாமாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. ஞானம் அங்கு உரை நிகழ்த்தும்போது நாம் பலகாலமாக அடக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால்தான் எமது உரிமைகளையடைவதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறோம். இந்தப்போராட்டம் எமது மண்ணில்வாழும் அனைவருக்கும் உரியது.

எதிரியைக் கண்டு ஓடாகல் எதிர்த்து நிற்கவேண்டிய மனோபலம் அனைத்து மக்களுக்கும் வரவேண்டும் என்றார்.

இந்த நினைவுக்கூட்டத்தின் ஆரம்பத்தில் மேஜர் குமுதனின் நினைவுத்தூபிக்கு அவரது தந்தையார் குத்துவிளக்கு ஏற்றி மாலை அணிவித்தார்.

(தி)

# திருவள்ளுவர் விழா

காரைநகர் கொத்தணி அமைப்பு நடாத்தும் திருவள்ளுவர் விழாஎதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை [9.2.92] பிற்பகல் 12.30 மணிக்கு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர் செ. தேவநேசன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் 'வழிகாட்டும் வள்ளுவம்' எனும் தலைப்பில் ஆய்வுரைகளும் 'தமிழ்எங்கள் உயிருக்கு நேர்' எனும் தலைப்பிலான கவியரங்கும் இடம் பெறவுள்ளன.

## தொப்பிக்கலையில்

தொப்பிகலைக்கு சமீபமாகவுள்ள பெரியவடமுனை. குடும்பிமலை ஆகிய இடங்களில் சித்தாண்டி, கிரான், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, வந்தாறுமூலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விவசாயிகள் படையினரால் தாக்கப்படுவதினாலேயே விளைந்த வேளாண்மையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தகவல் தெரிந்தவர் தொடர்பு கொள்ளவும்



நாவத்குழி ஆயிலிப்பிட்டிச் சுடலைக் கிணற்றுள் ஒரு ஆணின் சடலம் போடப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது, 09-01-92 நண்பகல் சுடலைக்கு விறகு வெட்டச் சென்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சடலத்தின் புகைப்படம் இங்கு காணப்படுகிறது. இவர் பற்றிய தகவல் அறிந்தோர் குற்றப் புலனாய்வுப் பிரிவுடன் அல்லது சாவகச்சேரி காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். இவரை அடித்துக் கொலைசெய்த பிறகு கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

விபரங்கள் வருமாறு:-

★ சம்பவம் நடைபெற்றதாக ஊகிக்கப்படும் திகதி: ஜனவரி 1992-5-6-7-8 ஆம் திகதிகள்

★ உயரம்: 5அடி 6அங்

★ வயது: சுமார் 30

★ தேகக்கட்டு: சுமாரானது

★ அணிந்திருந்த ஆடை: வெண்நிறத்தில் நீலக்கோடுகள் சதுரம் சதுரமாய் அமைந்த நீளக்கை பொலியஸ்ரர் சேட் வெண்மையான கருமை கலந்த புகை நிறத்தில் நீளக் கோடுபோல் அமைந்த துணியில் தைக்கப்பட்ட கால்சட்டை

★ விஷேட அடையாளங்கள்: வலது கணுக்காலில் சிறிய காயம் ஏற்பட்டு ஆறிய தழும்பு

★ இவர் வடபகுதிக்கு வெளியேயிருந்து வந்திருக்கலாம் என நம்புகிறோம்.

# இராணுவச் சீருடைகள் கடைகளிலிருந்து மீட்பு

(அநுராதபுரம்)

இராணுவச் சீருடைகள், காலணிகள், பட்டிகள் மற்றும் ரவைக் கூடுகள் ஆகியவற்றை அநுராதபுரத்தில் ஒரு கடையிலிருந்து இராணுவப் பொலிஸ் கைப்பற்றியுள்ளது.

இது தொடர்பாக அநுராதபுர வர்த்தகர் ஒருவரும் இராணுவக் கோப்ரல் ஒருவரும் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

# தி. மு. க. பேரணிகளுக்கு தமிழகத்தில் தடை விதிப்பு

(சென்னை)

ஊர்வலங்கள், மற்றும் பேரணிகளின்போது வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறமாட்டாது என்றும், மீறிநடந்தால், சேதமடையும் சொத்துக்களுக்கான இழப்பீட்டுத் தொகையை கட்சி அளிக்கும் என்றும் எழுத்து மூலமான உத்தரவாதம் தரப்பட்டால் மாத்திரமே இனிமேல் தி. மு. க வினர் ஊர்வலம் மற்றும் பேரணிகள் நடத்த அனுமதிக்கப்படுவார்கள் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் கூறினார்.

சட்டப் பேரவையில் எதிர்க் கட்சிதலைவர் ஆர்.பாலசுப்பிரமணியத்தின் கேள்விக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். முதலமைச்சரின் இக் கூற்றுக்கு பதிலளிக்க முயன்ற தி. மு. க உறுப்பினர் பரிதி இளம்வழுதி சபைத் தலைவரின் அனுமதியின்றிப் பேச முற்பட்டதாகக் கூறி அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களான தி.மு. க வைச் சேர்ந்தசெல்வராசன், பாட்டாளி மக்கள் கட்சியைச்சேர்ந்த பண்டிருட்டி ராமச்சந்திரன் மற்றும் எதிர்க் கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

பேச அனுமதிமறுக்கப்பட்ட பின்னர் சட்டசபையைவிட்டு வெளியேறிய காங்கிரஸ் கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சியினர் சபைக்கு வெளியே செய்தியாளரிடம் பேசினர்.

அ. தி. மு க அரசாங்கத்தின் புதிய நிபந்தனை மக்கள் ஆட்சித்தத்துவத்திற்கே மாறுபட்டது. அடிப்படை உரிமைகளை வழங்கும் அரசியல் சாசனத்துக்கே எதிரானது. அரசின் இந்தப் போக்கை முளையிலேயே கிள்ளி எறியவில்லையானால் மற்றக் கட்சிகளுக்கும் இத்தகைய முன் நிபந்தனைகள் வைக்கப்படும் என்றார்கள்.

## தேசிய கல்விநிறுவன
# கல்வி டிப்ளோமா பயிற்சி மார்ச்சில் ஆரம்பமாகும்

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா பயிற்சி மார்ச் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் பகுதிநேரக் கல்வி டிப்ளோமா பயிற்சிக்காக நானூறு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டோருக்கான நியமனக் கடிதங்கள் இன்னும் இரண்டு வாரங்களில் அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். இப்பயிறசிக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (ச)

# நினைவஞ்சலி கூட்டம்

முன்னாள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் பிரசாத் [கந்தசாமி முரளிதரன்] அவர்களது நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை மூளாயில் உள்ள மேஜர் பிரசாத் ஞாபகார்த்த திறந்த வெளி அரங்கில் நடைபெறும்

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலர் அஞ்சலி உரைநிகழ்த்துவார்கள் தொடர்ந்து ''களத்தில் காத்தான்'' ''வீழ்ந்தவர்கள் அல்ல விதைக்கப்பட்டவர்கள்'' ஆகிய இரு நாடகங்களும் நடைபெபெறும்

# புதியவர்களை கண்டுபிடிக்க ஊவாவில் மக்கள் கணிப்பு

(பதுளை)

ஊவா மாகாணத்தில் புதிதாக அப்பகுதிக்கு வருவோர்களை கண்டுபிடிப்பதற்கு வசதியாக தோட்டப்பகுதிகளில் சனத்தொகை மதிப்பீடு செய்யப்பட உள்ளது. இதற்கான ஒழுங்குகளை ஊவா மாகாண சபை முதலமைச்சர் பேர்சி சமரவீர செய்துள்ளார்.

இதற்கு பொலிசாரினதும் தோட்ட நிர்வாகத்தினதும் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

தோட்டப் பகுதியில் உள்ள பல தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளிலுள்ள புலிகளின் முகாம்களில் இராணுவப் பயிற்சி பெற்றிருப்பதாக பொலிசாருக்கு உறுதியான தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. தொண்டர் படையை ரிசேர்வ்பொலிஸ்போல்தயார்
## - கோபாலசாமி

(சென்னை)

தி. மு. க. தொண்டர் படையை ரிசேர்வ் பொலிஸ் படைபோல தயார்படுத்த வேண்டும். இப்போது அரசு கைது செய்தால் ரொம்ப நல்லது சிறையிலேயே அவர்களுக்கு அரச செலவில் பயிற்சி கொடுத்து விடலாம் என்று தி. மு. க எம். பி. திரு வே. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நெல்லை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றில் தலைமைதாங்கிப் பேசிய அவர் தொடர்ந்துபேசுகையில் ரிசேர்வ் பொலிசாரைப்போல தி. மு.க.தொண்டர்படையை உருவாக்கி அவர்களுக்குச் சீருடை வழங்க வேண்டும்.

அரசு கைது செய்தால் நல்லது. அரச செலவில் உள்ளேயே பயிற்சி கொடுத்து விடலாம் எனவும் கட்சிக்காகவே வாழ்ந்து இறந்த எமது தொண்டர்களுக்கு நிதியுதவி தரவேண்டும். தான் அழிந்தாலுங் கட்சியை தொலைப்படுத்தாத தொண்டர்கள்தான் தி. மு. க வினர் ஆகவே நெல்லை மாவட்ட மக்கள் கடுமையான முயற்சி செய்து தொண்டர்களுக்கு உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

### உணவு

தில்லை.இராணுவத்தினருக்கு ஊடாகவே சுடிதப் பரிமாறல்கள் செய்ய வேண்டியுள்ளது. பாடசாலைகள் இயங்குகின்ற போதிலும் அரசினால் விநியோகிக்கப்படும் இலவச பாடப்புத்தசங்கள் கூட மாணவர்சளுக்கு கிடைக்கவில்லை. இதனால் 1500 க்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

சில நாட்சளில் மட்டும் சந்தைக்கு மரக்கறிகள், தேங்காய்கள், கருவாடு போன்றவை கொண்டு வரப்படுகிறன. ஆனால் இவை இப்பகுதி மக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதுடன் அவற்றின் விலையும் அதிகமானதாகும். எனவும் தெரிவித்தார்.

### ரத்தம்

ருக்கும் உள்நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படவேண்டும் என்றும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

### பரீட்சை

ஆதர் வெதமுல்லை தெரிவித்துளளார்.

பாடசாலை மூலம் முதற்தரம் தோற்றும் பரீட்சாத்திகளுக்கு கட்டணம் வழமைபோல் அறவிடப்பட மாட்டாது.

### விசைப்படகு

நேற்றுமுன்தினம் நடந்த இத்தாசகுதலையும், இதில் நான்குகடற்படையினர் கொல்லப்பட்டமையையும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தின.

### மாபெரும்

போராட்டம் நடாத்தப்படுகிறது.

இவ்வெகுஜனப் போராட்டத்தில் பொதுமக்கள் அமைப்புக்களுடன் அரச உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் வங்கிஊழியர்கள் ஆகியோரும் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

குடாநாட்டில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலை மாணவர்கள் தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழீழத் தேசிய ஆசிரியர் சங்கம், இடம்பெயர்ந்த மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வடபிராந்திய மினி பஸ் போக்குவரத்து ஊழியர்கள் உட்பட வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம், வடபிராந்திய வர்த்தகர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவரவை, தனியார் கல்வி நிலையங்கள், மீன்பிடித் தொழிலாளர் சங்கங்கள், ஆகியவற்றுடன் ஏனைய தொழிற் சங்கங்கள், பொதுமக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றின் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் இப்போராட்டத்தில் கலந்துகொள்வர்என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முதற்கட்டப்போராட்டத்தின் இறுதியில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படவிருக்கிறது. இக் கோரிக்கைக்கு செவிசாய்த்து கோரிக்கைகள் அனைத்தும் இருவாரகாலத்திற்குள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டு கிராம மட்டத்திற்கு மேலும் விஸ்தரிக்கப்பட உள்ளதாக மேற்படி போராட்டத்தை ஒழுங்குசெய்திருக்கும் வெகுஜன ஒன்றியம் சிறிலங்கா அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. [க

### திருமலை

னர் கூறிவிட்டனர்.

குமாரசாமி கிருஸ்ணதாஸ் (சேனையூர்), கனகசபை தவராசா (கடற்கரைச் சேனை), கனகசூரியர் குணநாயகம் ஆகியோரே இவ்வாறு காணாமல் போனவர்கள் ஆவர்.

### முல்லை

லைத்தீவுக்கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகராசா தெய்வேந்திரன், செல்லத்துரை செல்வின் அன்ரனி எனும் இருவரும் காணாமல் போய்விட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

## முழுநேர கல்வி டிப்ளோமா;
# தெரிவானோர் விபரம் கல்விதிணைக்களம் வந்தது

(யாழ்ப்பாணம்)

கல்வி டிப்ளோமா பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டோரது பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓராண்டு முழு நேர கல்வி டிப்ளோமாப் பயிற்சிக்குத் தெரிவானோருக்கான நேர்முகப் பரீட்சையைக் கல்வித் திணைக்களமும் பல்கலைக் கழகமும் இணைந்து விரைவில் நடாத்தவுள்ளது.

இதில் தமிழ் மொழிமூலம் பயிலவிரும்புவோருக்கான பயிற்சி யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கான கடிதங்கள் விரைவில் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும். (ச)

# தற்காலிக ஆசிரியர்பட்டியல் வெள்ளியன்று வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டோரது பெயர் பட்டியல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என யாழ். கோட்டக் கல்வி அதிகாரி வேலாயுதம் தெரிவித்தார்.

கடந்த மாதம் யாழ் கோட்டத்தில் நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றிய முந்நூறுக்கும் மேற்பட்டோரில் நூறறி இருபது பேர் தற்காலிக ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### சிங்களக்

பக் கமிட்டியொன்று நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்திவுள்ளது.

கொழும்பிலிருந்து மூன்று மணி நேரத்தில் திருக்கோணமலைக்குச் சென்றடைவதற்கான போக்குவரத்து வீதி அமைப்பதும் இத்திட்டத்தில் அடங்கும்.

# பாகிஸ்தானில் வேலை நிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் மக்களுடன் தங்களுக்குள்ள உறவை காட்டும் வகையில் இன்று பாகிஸ்தானில் ஒரு நாள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென பாகிஸ்தான் பிரதமர் நவாப் செரீப் தெரிவித்துள்ளார்.


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் மாவட்டம்
# விசேட பொதுக்கூட்டம்

காலம்: 7.2.92 வெள்ளி மாலை 4.00 மணி
இடம்: புதிய விஞ்ஞான கல்விக் கழகம் யாழ்ப்பாணம் (எழிலகம் முன்பாக)
விடயம்: (i) விசேட அலுவலர்களை அறிமுகம் செய்தல்.
(ii) விசேட அறிவுறுத்தல்கள் தெரிவித்தல்.

சகலகோட்டங்களினதும் சகல அங்கத்தவர்களும் கட்டாயமாக வருகை தந்து இவ்விசேட விளக்கங்களை நேரில் அறியுமாறு வேண்டுகின்றோம். வி. பு. ம. மு. உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

- பொதுச்செயலாளர்

(2184)



# மரண அறிவித்தல்
## கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

ஓட்டுமடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரஞ்சோதி ஜேர்மனியில் 01-02-92 இல் அகாலமரணமானார். இவர் சிவமலர்தேவி (சந்திரா) வின் அன்புக்கணவரும் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற லக்ஷ்மியின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் பெறாமகனும் பொன்னம்பலம்(UK), கனகசுந்தரம் தவமணி[கனடா], சண்முகராசா, சற்குணதேவி, சரஸ்வதி [A.G.A. மன்னார்], மகாலட்சுமி, சிவகுமார், நந்தகுமார் ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்ற பொன்னையா தம்பதிகள், நாராயணசிங்கம் தம்பதிகளின் பேரனுமாவார். மற்றும் கனகசுந்தரம், பிரேமளா, ஆகியோரின் மைத்துனருமாவார். இவரது ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

232/4 செபஸ்ரியார் லேன், ஓட்டுமடம். [சி/3891] தகவல் ; குடும்பத்தினர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.